# அனல்

2015

புதுமலர்: 12 இதழ்: 01 தை - மாசி

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்

ஆவியிலே அனலாயிருங்கள்

கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்

- ரோமர் 12:11 -

ஆசிரியர்:
வே.மகாராஜா

சீயோன் தேவாலயப் பிரசுரம்
ZION CHURCH PUBLICATION

01.01.2015

# பொருளடக்கம்


- அனலின் குரல்
- கவிதை - வந்தது புத்தாண்டு
- கதையும் கற்றதும் - மெதுவாகச் செல்லுங்கள்
- வாலிபர் வளாகம் - ஈசாக்கின் இரகசியம்
- நானே நல்ல மேய்ப்பன்
- பெண்கள் பக்கம் - முந்திக் கொண்டாள்
- நற்செய்திப்பகுதி - கர்த்தரின் வேளைக்காய் காத்திரு
- பக்தர்களின் பயிலகம்
- குறுக்கெழுத்துப் போட்டி - 65
- முன்மாதிரி
- அருட்பணியாளர் சரிதை - லோத்தி மூன், ஜான் ஹோல்ம்ஸ்
- வினா விடை - 67
- அனலின் புத்தாண்டு வாக்குத்தத்தச் செய்தி


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

## எழுத வேண்டிய விலாசம்


சீயோன் ஜெபக்குழு,
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

**Zion Prayer Group,**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.

ஆசிரியர் "அனல்",
347 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

*T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk*


திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன், உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11

Happy New Year 2015

# 2015

## வாக்குத்தத்தம்

உன்னோடேகூட இருக்கிற
ஜனங்கள் எல்லாரும்
கர்த்தருடைய செய்கையைக்
காண்பார்கள்:
உன்னோடேகூட இருந்து, நான்
செய்யும் காரியம்
பயங்கரமாயிருக்கும்.

யாத்திராகமம் 34:10

# அனலின் குரல்




**ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அனல் வாசக உள்ளங்களுக்கு எனது புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.**

உண்மையும், நீதியும், பரிசுத்தமும் உள்ள தேவனாகிய கர்த்தர் கடந்து சென்ற ஆண்டில் செய்த அனைத்து நன்மைகளுக்காகவும், நடத்திச் சென்ற பாதைகளுக் காகவும் சகல மகிமையையும் அவருக்கே செலுத்து வோமாக.

2014ஆம் ஆண்டு பூராகவும் அனல் வெளிவரத்தக்கதாக கிருபை செய்த தேவனுக்கு நன்றிகள் உரித்தாகட்டும். மேலும், இச் சஞ்சிகை வெளிவர ஒத்தாசை புரிகின்ற அருமையான வாசகர்களாகிய உங்களுக்கும் எமது நன்றிகள். இவ் வாண்டிலும் உங்கள் ஒத்துழைப்பை வழங்கி இவ் ஊழியத்தை வளரச் செய்யும்படியும், நீங்கள் இச் சஞ்சிகை மூலம் பெற்றுக் கொள்ளும் ஆசீர்வாதங்களை எமக்குத் தெரியப்படுத்தும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

கடந்த வருடம் எமது சபை ஐம்பத்தைந்து ஆண்டுகளை நிறைவு செய்ய கிருபை செய்த கர்த்தருக்கு மகிமை செலுத்துகின்றோம். அத்துடன் புதிதாக தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட போதகர் ஜோஹணன் டேவிஸ் பிலிப் அவர்களையும் வாழ்த்துகின்றோம்.

அப்போஸ்தலர் 9ஆம் அதிகாரத்தில் இயேசு பவுலைச் சந்திக்கின்றார். அப்போது இயேசு கூறியது: **"நீ ஏன் என்னைத் துன்பப் படுத்துகிறாய்"** என்பதே. பவுல் விசுவாசிகளையே துன்பப்படுத்தினான் ஆனால் இயேசு தன்னைத் துன்பப்படுத்துவதாகச் சொன்னார். விசுவாசிகளுக்குச் செய்ததை கர்த்தர் தனக்கே செய்ததாகச் சொன்னார். ஏனெனில் இவர்கள் தான் உண்மையான கிறிஸ்தவர்கள். கிறிஸ்துவுடன் இணைந்திருந்தவர்கள் (கிறிஸ்து+ அவர்கள்) அவர்களுக்குச் செய்தது கிறிஸ்துவுக்குச் செய்ததே. அவர்களை நோகப்படுத்தியது கிறிஸ்துவை நோகப்பண்ணியது. ஆதிச் சபையில் இம் மக்களைப் பார்த்தவர்கள் இவர்களுக்கு கிறிஸ்தவர்கள் எனப் பெயர் வைத்தனர் - அப்போஸ்தலர் 11.

**இப் புத்தாண்டில் கிறிஸ்துவுடன் இணைந்து வாழும் உண்மைக்கிறிஸ்தவர்களாய் வாழ எம்மை அர்ப்பணிப்போமாக.**

- ஆசிரியர் -



# வந்தது புத்தாண்டு

வந்தது புத்தாண்டு எந்தனின் வாழ்வில்
தந்தது ஆனந்தம் எம்மவர் ஒவ்வர்க்கும்
நிந்தனை கலந்த நாளது ஒழிந்து
எந்தனை அழைத்த வேந்தனவர் இயேசு
சென்றது ஆண்டுகள் முழுமையும் நீங்கள்
தந்தவை அத்தனைக்கும் உந்தனுக்கு நன்றிகள்
உந்தனைத் தந்தீர் எந்தனை மீட்க
நிந்தனை சுமந்தீர் உந்தனின் மேலே
மானிடர் சுமந்த மாபெரும் சாபம்
பாவமதைப் போக்க பாரினில் வந்த
பரம தேவன் இயேசு தரும்
மாபெரும் ஈவு அது பாவ மன்னிப்பாம்
நானொரு பாவி என நீ சொல்லும் போது
என் பாவமதை பரிசுத்தர் நீர் சுமந்தீரென
இதயமதில் நீ விசுவாசம் கொள்ளும் போது
சுத்தப் பாவியையும் மாற்றிவிடும் பரிசுத்தமாய்
வந்திடுவார் பரமன் இயேசு உள்ளமதில்
தந்திடுவார் ஆனந்தம் தரணியில் எங்குமில்லா
பெற்றிடு புத்தாண்டில் பாவமன்னிப்பை
கற்றிடு அவர் வழிதனை
எத்தனை இன்னல் என்றாலும்
வைத்திடும் அனந்தமாய் எப்போதுமுனை!




**மலர்ந்திருக்கும் இப் புத்தாண்டில் அனல் வாசகர்கள் அனைவருக்கும் எனது உள்ளம் கனிந்த இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். புத்தாண்டில் என்ன கதை பிரசுரமாகி இருக்கின்றது என்று பார்க்க வேண்டும் என்ற உந்துதலினால் அவரசப்படுகின்றீர்களா? அவசரம் வேண்டாம்! மெதுவாகக் கதைக்குள் செல்லுங்கள்.**

நேரம் 7:50ஐக் காண்பித்துக் கொண்டிருந்தது. அவசர அவசரமாக வெளியே வந்த ஜேம்ஸ் தன் மோட்டார் சைக்கிளின் அழகை ஓரக்கண்ணால் ரசித்துக் கொண்டே காலை உணவை உட்கொள்வதற்காய் டைனிங் கோலிற்குள் நுழைந்தான். சாப்பாட்டை எடுத்து வைத்த பியூலா அவரசமாக வந்த ஜேம்சைப் பார்த்துः என்னங்க கொஞ்சம் நேரத்தோடேயே பாடசாலைக்கு ஆயத்தப்பட்டிருக்கலாமே! நேரம் சென்றுவிட்டது....... இனி வேகமாகச் செல்லப் போகின்றீர்களா? என்று கரிசனையுடன் கேட்டாள். ம்ம்ம்...... எனக்குத் தானே மோட்டார் சைக்கிள் இருக்கின்றது...... 5 நிமிடத்தில் பாடசாலைக்குச் சென்றுவிடுவேன் என்று ஏளனமாக சிறிய பாடத்தை நடத்தி முடித்தைப் போன்று பதிலளித்தான்.

அப்போது தொட்டிலில் படுத்திருந்த அவனது குழந்தை அழ ஆரம்பித்தது. ஓடிச் சென்ற பியூலா பிள்ளையை தாலாட்டி நித்திரையாக்க ஆரம்பித்தாள். ஜேம்சும் காலை உணவை உட்கொண்ட பின்னர் தன் மோட்டார் சைக்கிளை லாவகமாக இயக்கி பாடசாலைக்குப் பறந்தான். ஜேம்ஸ் தமிழ் பாட ஆசிரியராக பாடசாலையொன்றில் கல்வி கற்பித்துக் கொண்டு வருகின்றான். எப்போதுமே வேகமாகச் சென்று இறுதியாக கையெழுத்துப் போடும் பேர்வழி தான் ஜேம்ஸ். அதிபரும் அவனுக்கு எவ்வளவோ சொல்லியும் அவன் கேட்பதாயில்லை, ஆனால் வகுப்பில் பிள்ளைகளுக்கு அவன் பாடம் எடுக்கும் அழகே தனி அழகாக இருக்கும். பிள்ளைகளுக்கு அறிவுரை சொல்லி

கற்பிக்கும் அவனுக்கு தன் காரியங்கள் எப்போதுமே கண்ணுக்குத் தெரிவதில்லைத் தான்.

அவன் வழமையாக மோட்டார் சைக்கிளை இயங்கச் செய்து அதனை ஓட்டுவதே பயங்கரமாய் இருக்கும். இதனைப் பார்த்த அவனது பக்கத்து வீட்டு அங்கிள், வேடிக்கையாகஃ தம்பி! இது மோட்டார் சைக்கிள் என்ற பெயர் தான் ஆனால் இது மோட்டுச் சைக்கிள் நாம் தான் பார்த்துச் செலுத்த வேண்டும் என்று ஆசிரியருக்கே ஒரு குட்டி பாடம் நடத்திவிடுவார். ஆனால் அவனோஃ அங்கிள் அதெல்லாம் பார்த்துக் கொள்ளலாம் என்று சாதாரணமாக கூறிவிட்டுச் சென்றுவிடுவான். அவனது மோட்டார் சைக்கிளுக்கு ஜெட் என்ஜின் தான் பொருத்தியிருக்கின்றதோ என்று எண்ணுமளவுக்கு அவனது ஓட்டம் இருக்கும். **இதனை நினைக்கின்ற பியூலா எப்போதும் தன் கணவன் பாதுகாப்பாக வந்து சேர்ந்து விடவேண்டும் என்று ஜெபித்துக் கொண்டேயிருப்பாள்.** அவனுக்கோ அதைக் குறித்த எந்தக் கவலையும் இல்லாமல் மோட்டார் சைக்கிள் மாத்திரம் இருந்தால் போதும் என்ற எண்ணத்துடன் நடந்து கொள்வான்.

ஆனால் மற்றவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர் தன் வாழ்க்கையில் வாழ்க்கைப் பாடத்தைக் கற்றுக் கொள்ளவில்லை. ஒரு காரியம் என்றால் நேரத்தோடே எழுந்து நேரத்தோடு காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் எப்போதும் அவனுக்கு இருந்ததில்லை. அவசரமாக ஆயத்தமாகி அவசரமாகவே காரியங்களைச் செய்யப் பழகிக்கொண்டவன் தான் ஜேம்ஸ். அன்றைக்கும் காலையில் பாடசாலைக்கு செல்வதற்காய் ஆயத்தமாகி அவசரமாகவே மோட்டார் சைக்கிளை இயக்கிச் செலுத்திக் கொண்டு சென்றான் ஜேம்ஸ். அவ்வாறு சென்று கொண்டிருக்கும் போது எங்கோ சென்று கொண்டிருந்த நாய் ஒன்று இவனை சந்திப்பதற்காய் காத்திருந்தது போன்று இவனது மோட்டார் சைக்கிளுக்கு குறுக்கே வந்துவிட்டது. என்ன செய்வது வேகமாக வந்தவனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. கிரீச்.....கிரீச்..... சத்தம் தான் கேட்டது. அதற்கு பிற்பாடு அவனுக்கு என்ன நடைபெற்றது என்றே தெரியவில்லை. கண்களை மூடிக் கொண்டான்.

அவன் விபத்தில் சிக்கிவிட்டான் என்ற செய்தியைக் கேட்ட பியூலா என்ன செய்வதென்று புரியாமல் குழந்தையையும் தூக்கிக் கொண்டு ஓட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்தி வைத்தியசாலைக்கு ஓடிச் சென்றாள். அங்கே அவள் தன் கணவனை வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவிலேயே காணக்கூடியதாக இருந்தது. ஜேம்ஸ் கண்ணைத் திறந்து பார்த்த போதுஃ அங்கே அவனது மனைவி பிள்ளையையும் தூக்கி வைத்தபடி கண்ணீருடன் நிற்பதைப் பார்த்த அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

இப்போது காலையும் ஆட்ட முடியாமல் கையையும் ஆ ட் ட முடியாமல் படுத்த படுக்கையாக இருந்த போது அவனது கண்களில் இருந்து கண்ணீர் சொரிந்து கொண்டிருந்தது. அப்போது ஆதரவாக அவனது மனைவி அவனது தலையைத் தடவிக் கொடுத்தாள்.

அப்போது தான் அவன் சொன்னான்: நான் எனது சோம்பேறித தனத்தினாலும் அசட்டுத் துணிச்சலினாலும் சென்று இப்படி விபத்தில் சிக்கிக்கொண்டேனே! கொஞ்சம் நேரத்தோடு ஆயத்தமாகி குறைந்த வேகத்தில் சென்றிருந்தால் இவ்வாறு நடந்திருக்காதே என்று எண்ணிக் கொண்டிருக்கும் போது: அவனது பிள்ளை அழும் சத்தம் அவனை சுய நினைவுக்கு கொண்டு வந்தது.

ஆம் பிரியமான நண்பர்களே: கர்த்தர் ஒழுங்கின் தேவன். அவர் எமக்கு கொடுத்திருக்கும் நேரத்தை ஒழுங்காக பயன்படுத்தும் போது எமது காரியங் களைச் சரியாகச் செய்து முடிக்கலாம். வாழ்வில் ஒழுக்கத்தைக் கற்றுக் கொண்டு செயலாற்றப் பழகுவதோடு, பொறுமையையும் நாம் கடைப்பிடிக்க வேண்டும். அப்போது எமக்கு வர இருக்கும் பெரிய ஆபத்துக்களில் இருந்து நாம் காப்பாற்றப்பட முடியும். இப் புத்தாண்டில் ஒழுங்குள்ள வாழ்வுக்காக நீங்கள் அழைக்கப்படுகின்றீர்கள் என்பதனை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். **பிலிப்பியர் 3:16 ஆகிலும் நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அதுமுதல் ஒரே ஒழுங்காய் நடந்துகொண்டு, ஒரே சிந்தையாயிருப்போமாக.**

வை.விமல்

# குறுக்கெழுத்துப் போட்டி - 64
# சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. எல்பால் - 1நாளா 8:12
03. ஓபாவிடம் - எண் 10:31
07. ஏபால் - யோசு 8:30
10. சாலொமோன் - 1இரா 3:7
12. நிதனீமியர் - எஸ்றா 8:20

**வலமிருந்து இடமாக**

02. தானியேல் - தானி 12:7
05. திர்ஷாதா - எஸ்றா 2:63
06. ஏனோக்கு - யூதா 14
09. மேவிபோசேத் - 11சாமு 21:8
11. கழுகுகளைப் - 11சாமு 1:23

**மேலிருந்து கீழாக**

01. எலியேசர் - 11நாளா 20:37
02. தாவீதின் - 11இரா 8:19
04. பாருக் - எரேமி 32:12

**கீழிருந்து மேலாக**

08. எக்லோன் - நியா 3:17
11. கர்மேல் - 1சாமு 15:12
13. நெகேமியா - நெகே 4:4




- கையளித்தவன்
- மறவாதவன்
- விரும்பாதவன்



வாலிப உள்ளங்ளுக்கு கிறிஸ்து இயேசுவின் நாமத்தினாலே என் உள்ளம் நிறைந்த இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாவதாக! இந்த ஆண்டிலும் தேவ கிருபை தாமே உங்கள் ஒவ்வொருவரையும் தாங்கி பெலப்படுத்துவதாக.

தேவ அழைப்பை பெற்று அதற்கு அடிபணிந்து தன்னையும் தனக்கு உண்டான அனைத்தையும் அர்ப்பணித்தவன் ஆபிரகாம். இவனது நூறாவது வயதிலே குமாரன் ஈசாக்கு பிறக்கின்றான். நல்ல விசுவாசத் தாய்-தகப்பனுக்கு முதிர்ந்த வயதிலே பிறந்தவன் தான் ஈசாக்கு. தேவ உடன்படிக்கை, வாக்குத்தத்தங்கள் நிறைவேறுவதிலும், தேவனோடுள்ள உண்மை உறவிலுமே தங்கியுள்ளது. ஈசாக்கின் வாழ்விலிருந்து வாலிபத்திற்கு தேவையான மூன்று முத்துக்கள்.

- **கட்டப்பட்டு கட்டைகளின் மேல் கிடக்க கையளித்தவன்**
- **தினமும் தியானம் பண்ண மறவாதவன்**
- **வீண் வாக்குவாதத்தை விரும்பாதவன்**

# கட்டப்பட்டு கட்டைகளின் மேல் கிடக்க கையளித்தவன்

இந்தக் காரியம் நடக்கும் போது ஈசாக்கு மிகவும் திடகாத்திரமான ஓர் பெலம் மிக்க வாலிபனாய் இருந்தான். தகப்பனோடு பிரயாணப்படுகின்றான். தனக்கு ஒப்புக்கொடுக்கப் பட்ட பணிகளை செயற்படுத்துகின்றான்: நல்லது, ஆனால் அப்பாவைப் பார்த்து ஒரு கேள்வி: தகப்பனே, நெருப்பும் கட்டையும் இருக்கிறது. தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே? என்று கேட்கின்றான். தகப்பன் உடனடியாக, நீ தான் மகனே அந்த ஆட்டுக் குட்டி என்று சொல்லவில்லை, "தேவன் பார்த்துக் கொள்வார்!" என்று தேவனையே சார்ந்து வாழும் வாழ்க்கையின் வெளிப்பாடே அதுவாகும். மிக முக்கியமாக இங்கே ஈசாக்கின் கேள்வியானது நெருப்பும், கட்டையும் இருக்கிறது. நல்லது தேவை ஆனால்: தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே? இங்கே மிகவும் அழுத்தி கூறவிரும்புகின்றேன்: "தகனபலிக்கு" இது தான் தேவன் ஆபிரகாமிடம் கேட்ட பலியும்.

**ஆதியாகமம் 22:2 அப்பொழுது அவர்: உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார்.** பழைய ஏற்பாட்டிலே தகனபலியைக் குறித்த காரியம் மிகத்தெளிவாக சொல்லப்பட்டுள்ளது.

| பலி | வேத ஆதாரம் | பலிப்பொருள் | நோக்கம் |
|---|---|---|---|
| தகனபலி | லேவி 1, 6:8–13, 8:18–21, 16:24 | காளை, வெள்ளாட்டுக்கடா, ஆண்பறவை (ஏழைகளுக்கு புறா அல்லது புறாக்குஞ்சு) ஒரு ஊனமும் குறைபாடும் இருக்கக்கூடாது. முழுவதும் தகனிக்கப்படும். | தானாக செய்யும் வழிபாடு, பொதுவாக அறியாமல் செய்த பாவத்திற்கு பிராயச்சித்தம், பக்தியை வெளிப்படுத்தும் முறை, தேவனுக்கு தம்மை முற்றிலுமாக அர்ப்பணித்து சரணடைதல். |

தகனபலி:– "தகனபலி" என்பதற்குரிய எபிரெயச் சொல்லின் பொருள்: "மேலே தேவனிடம் எழும்பிச் செல்லுவது" என்பது. தேவனுக்கென்று ஒதுக்கப்படும் உண்மையான ஆராதனைக்கு முழு அர்ப்பணிப்பு தேவை என்பதற்கு அடையாளமாக பலிகள் முழுவதும் எரிக்கப்பட்டன. அதே

**நேரத்தில், பாவ மன்னிப்பு அதில் உட்பட்டது தேவனை தொழுது கொள்கிறவர்கள் தங்களை தேவனுக்கு அர்ப்பணிக்கும் முன்னர் அவர்கள் பாவம் நீங்கி சுத்திகரிக்கப்பட வேண்டியது அவசியம்.**

ஆபிரகாம் பலிபீடத்தை உண்டாக்கி கட்டைகளை அடுக்கி இறுதிக் கணம் வரை தான் தான் பலிப்பொருள் என்பதை அறியாத ஈசாக்கு தன் கைகளும், கால்களும் கட்டப்படும் போது எதிர்த்துப் பேசவோ, தகப்பனை உதைத்துத்தள்ளவோ, ஏன் அவ் இடத்தை விட்டு ஓடிவிடவோ இல்லை. தன்னை தானாகவே முன்வந்து அர்ப்பணிக்கின்றான்: இதோ அடியேன் என்பதாக. "மேலே தேவனிடம் எழும்பிச் செல்வதற்கு" சுகந்த வாசனையாக ஓர் வாசனை வீச விரும்பும் ஒவ்வொருவரும் கட்டப்பட்டு கட்டைகளின் மேல் கிடக்க கையளிக்க வேண்டியது அவசியம்! அவசியம்!. ஆபிரகாம் கீழ்ப்படிந்தது ஓர் மனித சத்தத்திற்கு அல்ல தேவ சத்தத்திற்கு! ஈசாக்கு தன்னை முற்றிலும் தகனபலியாவதற்கு அர்ப்பணித்தது தேவனிடம் எழும்பிச் செல்வதற்கே! மறந்து போக வேண்டாம்.

**இப்புதிய ஆண்டிலும் உன் அழகான வாலிபத்தை அவருடைய ஆணி பாய்ந்த கரத்தில் அர்ப்பணிப்பாயா?**

## தினமும் தியானம் பண்ண மறவாதவன்

தேவ வழியிலும், தேவ ஆசீர்வாதத்தையும் பெற்று வாழ விரும்புகிறவர்கள் தங்கள் சிந்தனைகளையும், மனப்பாங்கையும், கிரியைகளையும் ஒழுங்குபடுத்தும்படியாக தேவனுடைய வார்த்தையில் தியானமாயிருக்கிறார்கள். வேத வாக்கியங்களை வாசித்து, தியானித்து மற்ற வேத வாக்கியங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள். ஈசாக்கின் வாழ்விலே **ஆதியாகமம் 24:63 ஈசாக்கு சாயங்காலவேளையிலே தியானம்பண்ண வெளியிலே போயிருந்து, தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது, ஒட்டகங்கள் வரக்கண்டான்.** இதன்படி நேரமும், இடமும் தியானத்திற்காக விசேஷமாக ஒதுக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

சாயங்கால வேளை, வெளியே போயிருந்து தேவனோடும் அவரின் ஐக்கியத்தோடும் இருக்கும் தொடர்பு எப்பேற்பட்ட காரியங்களாலும் பாதிக்கப் பட்டுவிடக்கூடாது என்பதிலே மிகவும் கண்ணும் கருத்துமாயிருந்தான். தன் வாழ்விலே தேவன் செய்ய விரும்பும் திட்டத்திற்கு தன் ஆவி, ஆத்துமா, சரீரத்தை தயார்ப்படுத்துவதாகும். உடன் படிக்கைகள் உறவின் மூலமே பெலப்படும்: அதை ஈசாக்கு அறிந்திருந்தான்.

அருமையானவர்களே! உங்கள் வாழ்விலும் தனித் தியானத்திற்கு நேரத்தையும், இடத்தையும் இப் புதிய ஆண்டிலே ஏற்படுத்துவாயா?

# வீண் வாக்குவாதத்தை விரும்பாதவன்

முழுமையாய் அர்ப்பணித்து, தினமும் தியானம் பண்ணும் ஈசாக்கின் வாழ்விலே வேலையிலே விருத்தி, கையின் பிரயாசங்களில் ஆசீர்வாதம், பணிவிடைக்காரர்களில் பெருக்கம் இப்படி ஏராளமான நன்மைகளை ஒன்றன் பின் ஒன்றாக அவன் வாழ்விலே வரக்கண்ட அனேகர் ஈசாக்கின் பேரில் பொறாமை கொண்டு துரவுகளை (நீர் ஊற்றை) மண்ணினால் மூடிப்போட்டார்கள். ஈசாக்கை இருக்கும் இடத்திலிருந்து போகும்படியாக துரத்தியும் விடுகிறார்கள். **ஆதியாகமம் 26:16 அபிமெலேக்கு ஈசாக்கை நோக்கி: நீ எங்களை விட்டுப் போய்விடு: எங்களைப் பார்க்கிலும் மிகவும் பலத்தவனானாய் என்றான்.** தேவ உறவில் இருக்கும் மனிதனால் மட்டுமே இப்பேற்பட்ட சூழ்நிலைமைகளை மேற்கொண்டு சாட்சியாய் வாழ முடியும்.

ஈசாக்கு பேசாமல் (மௌனமாய்) கடந்து போகின்றான். போய் இருக்கும் இடத்தில் ஈசாக்கின் வேலையாட்கள் கடும் பிரயாசப்பட்டு தங்கள் பெலத்தை, நேரத்தை செலவு செய்து துரவு தோண்டினார்கள். சுரக்கும் நீரையும் கண்டு சந்தோஷப்பட்டார்கள். ஆனால் முடிவு: அதிலிருந்தும் விரட்டப்படுகிறார்கள். ஈசாக்கோடும், ஈசாக்கின் வேலையாட்களோடும் வாக்குவாதம் பண்ணினார்கள். அவ்விடத்தை விட்டு ஈசாக்கும் அவன் மனிதரும் கடந்து வேறு இடத்திற்கு போகிறார்கள். ஓர் பெரிய உண்மை சரியான தியான வாழ்வும், தேவனுக்கு அர்ப்பணித்து உடன்படிக்கையை காத்துக் கொள்ளவும் விரும்பும் நபருடன் வேலையாட்கள் கீழ்ப்படிந்தே செயலாற்றுவர். தொடர்ந்து வரும் அனேக வாக்குவாதத்தை ஈசாக்கு மேற்கொள்கின்றான். இறுதியாக, அவனுக்கு அவனை எதிர்த்து துரத்தியவர்கள் கொடுத்த பெயர்: **"நிச்சயமாய் கர்த்தர் உம்மோடே இருக்கிறார்".**

எனக்கு அன்பானவர்களே, இதே போன்று உங்கள் ஒவ்வொருவருடைய வாழ்விலும் நிறைவேற வேண்டுகின்றேன். நிச்சயமாய் கர்த்தர் உங்களோடே இருப்பாராக.

**போதகர்**
**வேதநாயகம் சுமணன்**



# நானே நல்ல மேய்ப்பன்

இயேசு கிறிஸ்துவின் அறிக்கைகளில் இதுவும் ஒன்றாகும். சரித்திரம் அனேக மேய்ப்பர்களை கண்டும், அறிந்தும் இருந்தாலும், அவர்களுக்கும் தனக்கும் உள்ள பாரிய வித்தியசாத்தை நமது ஆண்டவர் முன்வைக்க விரும்புகின்றார். அது தான் **“நானே நல்ல மேய்ப்பன்”** மேய்ப்பன் என்னும் வார்த்தைக்கு முன்னால் **“நல்ல”** நமக்கு நல்லதாக தோன்றுவதோ அல்லது நாம் நல்லதாக தெரிவு செய்வதோ அல்ல. **ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடைய வாழ்வின் அனைத்து காரியங்களையும் நன்கு அறிந்தவராக, புரிந்தவராக செயலாற்றுபவராக இயேசு மட்டுமே இருக்கிறார்.** மந்தை முழுவதுக்கும் பிரதான மேய்ப்பர் என்று தான் பேதுரு கூறுகின்றான்.



உன் காயங்களைக் கட்டும் மேய்ப்பர், பலவீனமான உன்னைப் பலப்படுத்துவார். நசல் கொண்ட உன்னை குணமாக்குவார், எலும்பு முறிந்த உன்னைக் காயங்கட்டுவார், துரத்துண்ட உன்னை திரும்ப சேர்த்துக் கொள்வார். காணாமல் போன உன்னைத் தேடுவார், சிதறுண்டு போன உன்னைக் கூட்டிச் சேர்ப்பார், கொழுத்து இளைத்த உனக்கு நியாயந்தீர்ப்பார். மேய்ப்பன் இல்லாமல் சூறையாடப்பட்ட உனக்கும் நல்ல மேய்ப்பனாய் இயேசு இருக்கிறார். அவரிடம் வா: அரே உன் நல்ல மேய்ப்பர்.

ரேமா

# முந்திக்கொண்டாள்!




**பெ**ண்கள் பொதுவாகவே எல்லாக காரியங்களிலும் முந்திக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் உடையவர்கள் சமையற் கலை, தையல்கலை, படிப்பு - பட்டம், தங்களை அழகுபடுத்துவதில், ஏன் பேச்சிலும் கூட முந்திக் கொள்வார்கள்.

அண்மையில் பத்திரிகையில் முந்திக் கொண்ட ஒரு ஸ்திரியின் சம்பவம் வெளியிடப்பட்டிருந்தது. இந்த ஸ்திரி ஓட்டப் போட்டிகளில் தொடர்ந்து சில வருடங்களாக முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்டு வந்தாள். இம் முறை ஓட்ட போட்டி நாட்களில் இவள் எட்டு மாத கர்ப்பிணியாக இருந்தாள். இம்முறையும் தான் தான் முந்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன், எட்டு மாத கர்ப்பிணிப்பெண் போட்டியில் கலந்து கொண்டு முந்திக் கொண்டாள்.

> “ ”
> மாற்கு 14:8 இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்: நான் அடக்கம்பண்ணப்படுவதற்கு எத்தனமாக, என் சரீரத்தில் தைலம்பூச முந்திக்கொண்டாள்.

இப்பெண்மணி தன்னுடைய சரீர நிலைமையை பார்க்கவில்லை, தான் சுமக்கும் கருவை குறித்து சிந்திக்கவில்லை. மக்களின் விமர்சனத்தைக் குறித்து கலக்கமடையவில்லை. இம்முறையும் தான் முந்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் போட்டியில் கலந்து கொண்டு மற்றவர்களைவிட முந்திக் கொண்டாள்.

வேதாகமத்திலும் இயேசுவின் சரீரத்திலே தைலம் பூச முந்திக் கொண்ட ஸ்திரியைக் குறித்து **மாற்கு 14:8இல் காணலாம். இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்: நான் அடக்கம் பண்ணப்படுவதற்கு எத்தனமாக, என் சரீரத்தில் தைலம்பூச முந்திக் கொண்டாள்.** என்று வாசிக்கின்றோம். இயேசுவே

அவளைக் குறித்து என் சரீரத்திலே தைலம் பூச முந்திக் கொண்டாள் என்று கூறியிருக்கின்றார். இந்த ஸ்திரி சீமோன் என்பவனுடைய வீட்டிற்கு சென்று அங்கே விலையேறப் பெற்ற நளதம் என்னும் உத்தம தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியை உடைத்து அந்த தைலத்தை இயேசுவின் சிரசின் மேல் ஊற்றினாள். **மாற்கு 14:3 அவர் பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீட்டிலே போஜனபந்தியிருக்கையில், ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற நளதம் என்னும் உத்தம தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக்கொண்டு வந்து, அதை உடைத்து, அந்த தைலத்தை அவர் சிரசின் மேல் ஊற்றினாள்.**

"பல தைலம் அவளிடம் இருந்திருக்கலாம். ஆனால் அதிலும் இயேசுவுக்கு விலை கூடியதை கொடுக்க வேண்டும். அதிலும் உத்தம தைலம்! எந்தக் கலப்பும் இருக்கக்கூடாது என்ற எண்ணத்துடன் வந்தவள். அதை உடைக்கின்றாள்.

இயேசு அங்கு வந்திருக்கின்றார் என்று அவள் முதலில் அறிந்திருப்பாள். இயேசுவை எப்படியாவது சந்திக்க வேண்டும் என்று ஆவலுடன் வந்திருப்பாள். வரும் போது தன்னிடம் உள்ள விலையேறப் பெற்ற நளதம் என்னும் உத்தம தைலத்துடன் வருகிறாள். பல் தைலம் அவளிடம் இருந்திருக்கலாம். ஆனால் அதிலும் இயேசுவுக்கு விலை கூடியதை கொடுக்க வேண்டும். அதிலும் உத்தம தைலம்! எந்தக் கலப்பும் இருக்கக்கூடாது என்ற எண்ணத்துடன் வந்தவள். அதை உடைக்கின்றாள். உடைக்காமல் கொடுத்தால் சிலநேரத்தில் தனக்கு அதில் மீண்டும் ஆசை வந்தால் இயேசுவிடம் வந்து கொடுத்ததை தான் மீண்டும் பெற்றுக் கொள்ள ஆசை ஏற்படலாம். எனவே அதை உடைத்து அவர் சிரசின் மேல் ஊற்றிவிட்டாள். ஊற்றினால் மீண்டும் எடுக்க முடியாது. இயேசுவுக்கு கொடுத்தால்: அது கொடுத்தது தான்.

இயேசுவுக்கு செய்த காரியத்தை பார்த்துக் கொண்டிருந்தவர்களால் சகிக்கமுடியவில்லை. தாங்களும் செய்யமாட்டார்கள்: செய்பவர்களைப் பார்த்து முறுமுறுக்க ஆரம்பிக்கின்றார்கள். இயேசுவின் சிரசின் மேல் ஊற்றியது வீண் செலவு போன்று முறுமுறுப்பவர்களுக்குதென்பட்டது. அதிலும் அதிகமான பணத்திற்கு தைலத்தை விற்றிருக்கலாம்! தரித்திரருக்கு கொடுத்திருக்கலாம்! என பலவிதமாக தங்களுடைய சொந்த எண்ணத்தில் பேச ஆரம்பித்துவிட்டார்கள்.

**மாற்கு 14:6 இயேசு அவர்களை நோக்கி: அவளை விட்டுவிடுங்கள்: ஏன் அவளைத் தொந்தரவு படுத்து**

**கிறீர்கள்? என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக் கிறாள்.** முறுமுறுப்பவர்களின் பார்வையில் இயேசுவுக்கு செய்த காரியம் வீண் செலவு போன்று தென்பட்டது. ஆனால் இயேசுவின் பார்வையில் நற்கிரியையாக காணப்பட்டது. **மாற்கு.14:9 இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.** எட்டு மாதக் கர்ப்பிணிப் பெண்ணின் சம்பவம் சில நாட்களின் பின்பு மறக்கப்பட்டுப் போகும் ஆனால் இயேசுவுக்கு தைலம் பூச முந்திக் கொண்ட ஸ்திரியின் சம்பவம் வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது. உலகம் இவளை நினைப்பதற்கும் இவள் செய்த காரியம சொல்லப்படுவதற்கும் காரணம்: தைலம் பூச முந்திக் கொண்டதே.

**சகோதரியே, 2015ஆம் ஆண்டு கர்த்தருடைய கிருபையினால் நீ ஈவாக பெற்றுக் கொண்ட ஆண்டு. அனல் சஞ்சிகையின் பெண்கள் பகுதிக்கூடாக கர்த்தர் உன்னுடன் இவ் ஆண்டில் பேச விரும்புகின்ற காரியம்: நீயும் கர்த்தருடைய காரியங்களில் முந்திக் கொள்ள வேண்டும். ஏன்? கர்த்தருடைய வருகை அதி சீக்கிரம்! கர்த்தரை சந்திக்க நாம் முந்திக் கொள்ள வேண்டும்.**

கடந்த ஆண்டில் நீ கர்த்தருடைய காரியங்களுக்கு முதன்மையான இடம் கொடுக்காமல் இருந்திருக்கலாம். **இவ் ஆண்டு கர்த்தர் எதிர்பார்க் கின்றார். நாம் ஒவ்வொருவரும் கர்த்தருடைய காரியங்களில் முந்திக் கொள்ள வேண்டும். உன் சபை மூலமாக நடைபெறும் ஆராதனைகள், வீட்டுக் கூட்டங் கள், வேதப்படிப்புக்கள், உபவாசக் கூட்டங்கள் போன்றவற்றில் பங்குகொள்ள முந்திக் கொள்ள வேண்டும்.** ஸ்திரி சீமோன் வீட்டிற்கு சென்று இயேசுவுக்கு தைலம் பூச முந்திக் கொண்டாள். இயேசு தன்னிடமாய் வரும்மட்டும் அவள் காத்திருக்கவில்லை, இயேசுவை சந்திக்க ஆயத்தமாய் தன்னிடம் இருந்த விலையேறப் பெற்றதை எடுத்து சென்றாள்.

நீயும் கூட இவ்வாண்டு கர்த்தருக்கு கொடுப்பதில் முந்திக் கொள்ள வேண்டும். கர்த்தருடைய காரியங்களில் நீ முந்திக் கொள்ளும் போது அநேக முறுமுறுப்புக்கள், தொந்தரவுகள் ஏற்படலாம். ஆனால் நீ பயப்படாதே! தைலம் பூச முந்திக் கொண்ட ஸ்திரியைப் பார்த்து இயேசு சொன்னார்: என்னிடத்தில் நற்கிரியை செய்திருக்கிறாள் என்றார். உன்னையும் பார்த்து, இப்படியாக இயேசு சொல்ல வேண்டும் என்றால், நீ செய்ய வேண்டிய காரியம் 2015ஆம் ஆண்டில் கர்த்தருடைய காரியங்களில் முந்திக் கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்துடன் நீ செயற்படும் போது தேவ ஆசீர்வாதம் உன்னுடன் கூட இருக்கும்.

**திருமதி. J.பிலிப்**

# கர்த்தரின் வேளைக்காய் காத்திரு!






அன்பு சகோதரா, சகோதரி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தினால் இப் புதிய ஆண்டில் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆண்டவருடைய புதிய கிருபை, புதிய இரக்கம், புதிய ஆசீர்வாதம், புதிய நன்மைகள், கழுகிற்கொத்த பெலம் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் நிறைக்க வேண்டுமென ஜெபிக்கின்றேன்.

**யோபு 42:2 தேவரீர் சகலத்தையும் செய்யவல்லவர்: நீர் செய்ய நினைத்தது தடை படாது என்பதை அறிந் திருக்கி றேன்.** இது ஒரு உண்மைப் பக்தனு டைய அடி ஆழத்தில் இருந்து எழுகின்ற ஆத்தும நங்கூர வார்த்தைகள். யோபுவினுடைய சூழ்நிலைகள் பாதகமாகிப் போய், அவனுடைய வாழ்க்கை இருண்டு போய் இனி தன் வாழ்வில் ஒளி இல்லை, என் வாழ்வு துளிர் விடுமா என்ற ஏக்கத்தோடு இருந்த நிலையில் திடீரென தேவனுடைய கரம் குறுக்கிட்டு அவனுடைய கற்பனைக்கெட்டாத ஒரு ஆசீர்வாத சூழ்நிலை மாற்றம் ஏற்பட்டது.

> "யோபுவினுடைய சூழ்நிலைகள் பாதகமாகிப் போய், அவனுடைய வாழ்க்கை இருண்டு போய் இனி தன் வாழ்வில் ஒளி இல்லை, என் வாழ்வு துளிர்விடுமா என்ற ஏக்கத்தோடு இருந்த நிலையில் திடீரென தேவனுடைய கரம் குறுக்கிட்டு அவனுடைய கற்பனைக்கெட்டாத ஒரு ஆசீர்வாத சூழ்நிலை மாற்றம் ஏற்பட்டது."

இதே வண்ண மாக சாராளிற்கு குழந்தை பாக்கியம் அளிக்கும் தேவனு டைய வேளை வந்தது. ஆனால் சாராளோ குழந்தை பெற்றெடுக்கும் வாய்ப்புகள் இழந்திருந்தாள். ஆனால் தேவன் செய்ய நினைத்த காரியம் தடைபடவில்லை.

மட்டுமல்ல, யோசேப்பை எகிப்தின் உயர் பதவியில் வைக்கும் தேவனுடைய வேளை வந்தது. ஆனால் யோசேப்பு சிறையில் இருந்தான். ஆனாலும் தேவன் செய்ய நினைத்தது தடைபடவில்லை.

அன்பு சகோதரா, சகோதரி சிலவேளை நம்முடைய தற் போதைய சூழ்நிலைகூட நம்பிக்கை அற்றதாக, எல்லாம் முடிந்துவிட்டது, எதுவும் இல்லை என்பது போல் காணப்பட லாம். ஆனாலும் கர்த்தர் அது போன்ற சூழ்நிலையிலும் ஒரு ஆச்சரியமான திருப்பத்தை ஏற்படுத்துவார். எனவே சூழ் நிலைகளைப் பார்த்து பயந்து கவலைப்படாமல் அவரிற்கு காத்திரு! அவரது வேளையில் அவர் உனக்காக செய்ய நினைத்தது தடைபடாது நிறைவேறும்.

**தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.**

உங்கள் அன்பின்
**J.கிரேசியன்.**

# சரியான விடை எழுதியவர்கள்

01. செ.டிசேந்திரன் - பாண்டவெட்டை
02. சி.ரதீஸ்வரி - பாண்டவெட்டை
03. வ.ஜெயாழினி - பாண்டவெட்டை
04. வி.தயாழினி - பாண்டவெட்டை
05. எஸ்.எமீமாள் - பாண்டவெட்டை
06. சி.அம்பாள் - மீசாலை
07. சி.எப்சிபா - மீசாலை
08. சி.அபிகாயில் - மீசாலை
09. மேர்வின் பிரான்சிஸ் - மானிப்பாய்
10. பிரான்சிஸ் கஸ்தூரி - மானிப்பாய்
11. வி.நிதர்சன் - ஊர்காவற்றுறை
12. வி.சர்மிளா - ஊர்காவற்றுறை
13. வி.நிதர்சனா - ஊர்காவற்றுறை
14. க.விக்னேஸ்வரன் - ஊர்காவற்றுறை
15. கே.றெஜீவன் - ஊர்காவற்றுறை

# வினா விடை

## - 66 -




## மூப்பர்களை நியமித்தல்

ஒரு சபை மூப்பர்களை நியமிக்கவிருந்தால், இந்த சத்தியத்தை இருதயத்தில்வைத்திருக்க வேண்டும். **அப்போஸ்தலர் 20:28 ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தி னாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள். இங்கு பரிசுத்த ஆவியானவர் மூப்பர்களை நியமித்திருந்ததைக் காணலாம். 1கொரிந்தியர் 12:28**

**மூப்பர்களாக சேவை செய்ய இயேசுவே அழைக்கிறார், வனைகிறார், அணிப்படுத்துகிறார் (தயார் நிலைக்கு கொண்டு வருதல்).** ஒரு மூப்பரைத் தெரிவு செய்ய முன் சபையானது ஜெபிக்க வேண்டும். **எது மட்டும்? தேவன் இவர்களை இந்த ஊழியத்திற்கு அழைத்துள்ளார் என்பதனைக் குறித்து பரிசுத்த ஆவியானவரால் உணர்த்தப்படும் வரையும் நிச்சயத்தைப் பெறும் வரையும்.** அத்துடன் மூப்பராக நியமிக்க இருப்பவரின் தகுதியைப் பற்றியும் தகமையைப் பற்றியும் வேத வெளிச்சத்தின் அடிப்படையில் படிக்க வேண்டும், ஆராய வேண்டும்.

**தேவ சித்தத்தை குறித்த நிச்சயம் இல்லாவிட்டால் காத்திருக்கலாம். எதுவரை முழு நிச்சயம் பெறும்வரை.** மூப்பர்களை நியமிக்கும் போது சபை ஏகமனதாக அதை ஏற்றுக்கொள்ளாவிட்டால் நியமிக்கக் கூடாது. **நியமித்தால் பிரிவினைகளும், பிரச்சினைகளும் ஏற்படும்.** அத்துடன் மூப்பர்கள் புதிதாக மனந்திரும்பியவர்களாகவும் இருக்கக்கூடாது. **மூப்பர்கள் நிலைப்படுத்தப்பட்ட பாணி அப்போஸ்தலர் 14:23இல் சொல்லப்பட்டுள்ளது.** அல்லாமலும் அந்தந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தி வைத்து, உபவாசித்து, ஜெபம்பண்ணி, அவர்கள் விசுவாசித்துப் பற்றிக் கொண்ட கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள்.

மூப்பர்களை நியமிப்பதற்கான வேதாகம சட்டத்தை இங்கே காணலாம்.

*01. ஜெபமும் உபவாசமும்*

*02. இங்கு பவுலும் பர்னபாவும் பூர்வாங்க வேலை செய்கிறார்கள்.* *"அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தி"* இவர்கள் சபையின் அங்கத்தவர்களை அறிந்திருந்தார்கள். அவர்களுக்குள் ஊழியம் செய்ததினால் சரியான நபர்களைத் தெரிவு செய்ய உதவக் கூடியதாக இருந்தது.

*03. யார் நியமிக்கப்பட்டார்களோ, அவர்கள் அதே சபையைச் சேர்ந்தவர்களும், அந்த சபையிலேயே ஊழியம் செய்யப்போகிறவர்களும் ஆகும். இது மிகவும் முக்கியமானதாகும்.*

*04. தெரிவு செய்தல் என்ற கிரேக்க பதம் அழுத்திக் காட்டும் கருத்து - பொதுவான சம்மதம். அப்போஸ்தலர்கள் இவர்களைச் சுட்டிக்காண்பித்தார்கள். சபையார் சம்மதம் தெரிவித்தார்கள்.*

எனவே முழுச் சபையும் அப்போஸ்தலரின் உதவியுடன் மூப்பர்களைத் தெரிவு செய்தார்கள்.

*05. மூப்பர்களாக நிலைப்படுத்தல் ஜெபத்தின் பின்பும் உபவாசத்தின் பின்புமே நடக்கிறது.*

சபையின் அங்கத்தவர்கள் முதலாவதாக பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலைக் குறித்து அறிந்து இருக்க வேண்டும். இவர்களுக்கு தேவ சித்தத்தைக் குறித்து தெளிவான நடத்துதல் இருந்தால்: 1. நிச்சயம் அவர்களை மூப்பர்களாக நியமிப்பார்கள் - ஏற்பார்கள். 2. ஜெபிப்பார்கள் - தேவையான கிருபையை தேவன் அவர்களுக்கு கொடுக்கவும், இவர்கள் ஊழியத்தை ஆசீர்வதிக்கவும்.

ஆகவே இந்த வேதாகம முறையை நாம் கைக்கொள்ள வேண்டும்.

## மூப்பர்களது ஊழியம்

**1பேதுரு 5:1-4 (1.) உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்திசொல்லுகிறதென்னவென்றால்: 2. உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டா யமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான**

ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், 3. சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள். 4. அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள். தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து... ஆகவே மந்தைக்கு நல்ல மேய்ப்பராய் இருந்து மந்தையோடு நிற்கும் மேய்ப்பனின் காட்சி பலஸ்தீனத்திலும் அதன் அண்டை நாடுகளிலும் சாதாரணம் ஆகும். இது இயேசுவுக்கும் சீஷர்களுக்கும் நன்கு பழக்கப்பட்ட ஒன்றாகும்.

சபையின் ஊழியத்திற்கு இது பொருந்தக்கூடிய ஓர் அடையாளமாக இருந்ததினால் இயேசு இதைப் பாவிக்கின்றார். எனவே ஒரு மேய்ப்பன் எப்படிக் காணப்பட வேண்டும் என ஆராய்வோம்.

## 01. மேய்ப்பன் தன் மந்தையை அறிந்திருக்க வேண்டும்

இயேசு: யோவான் 10:14-15 (14.) நானே நல்ல மேய்ப்பன்: பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறது போலவும், 15. நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்: ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன். இயேசு ஆடுகளை அறிந்திந்தார். எனவே மேய்ப்பன் அல்லது மூப்பன் தன் சபையில் உள்ள எல்லா அங்கத்தவர்களையும் அறிந்து கொள்ள முழு முயற்சி எடுக்க வேண்டும். மேய்ப்பன் ஆடுகளின் வித்தியாசமான கதறுதல்களையும் அறிந்திருக்க வேண்டும்.

சில ஆடுகளின் சத்தம் சந்தோஷத்தைப் பிரதிபலிக்கும்

சில ஆடுகளின் சத்தம் துயரத்தையும், நோயையும் பிரதிபலிக்கும்

சில ஆடுகளின் சத்தம் பசி, தாகத்தை பிரதிபலிக்கும்

எனவே ஒரு நல்ல மேய்ப்பன் ஆடுகளின் சத்தத்தை இனங்கண்டு எது குறைவு படுகிறதென அறிந்து தேவையானதைச் செய்வான். இது மூப்பனில் காணப்பட வேண்டிய அவசிய தேவைகளில் ஒன்று. மூப்பர்கள் சபை அங்கத்தவர்களையும் அவர்கள் தேவைகளையும் அறிந்திருந்தால் அவர்களை சரியான முறையில் கவனிக்கக்கூடியதாக இருக்கும்.

(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் எம்.எம்.இன்பரூபன்)

தொடரும்...

# குறுக்கெழுத்துப்போட்டி – 65

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | ☺ | ☺ | | | 02 |
| | ☺ | | | | | 03 | ☺ | |
| | 04 | | | | ☺ | | ☺ | |
| | ☺ | | | 05 | ☺ | | | |
| | | 06 | ☺ | ☺ | ☺ | | | |
| | | 07 | | | | ☺ | | |
| | | ☺ | | | | 08 | 09 | ☺ |
| | 10 | | | | | | ☺ | ☺ |
| ☺ | 11 | ☺ | ☺ | ☺ | | | | 12 |

குறிப்பு:- 12 வயதுக்கு மேற்பட்டவர்களை தயவு செய்து குறுக்கெழுத்துப் போட்டியை செய்து அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம்.
- நன்றி -

## இடமிருந்து வலமாக

01. தன் தேகத்தினுள் தன் ஆவியிலே சஞ்சலப்பட்டவன்
04. இவனைப் பார்க்கிலும் உத்தமனாயிருக்கிற இவனின் தோழனுக்கு இஸ்ரவேலின் ராஜ்யம் கொடுக்கப்பட்டது
07. உயிரோடிருக்கிற பிள்ளையின் தாயைக் கண்டறிந்தவன்
10. "..... நன்மையை யோசிக்கிறவர்களுக்கோ கிருபையும்..... உண்டு"

## வலமிருந்து இடமாக

02. தேவனுக்கு முன்பாகத் தன் முகத்தை ஏறெடுக்க வெட்கிக் கலங்கியவன்
03. "மகிமை இஸ்ரவேலை விட்டுப் போயிற்று" என்று இவனின் மனைவி கூறினாள்
05. அம்பு பட்டவுடன் தன் இரதத்தில் சுருண்டு விழுந்தவன்
08. பேரீச்சமரங்களின் பட்டணத்தைப் பிடித்த ராஜா
12. மோசேயின் அம்மா

## மேலிருந்து கீழாக

01. "ஞானிகளின் வாக்கியங்கள்........ போலவும் சங்கத்தலைவர்களால் அறையப்பட்ட ஆணிகள் போலவும் இருக்கிறது"
02. யோயாக்கீமின் முதற் பெயர்
03. 12 அப்போஸ்தலரில் ஒருவன்
06. தேவனுடைய பெட்டி அசைந்த போது தன் கையை நீட்டி அதைப் பிடித்தவன்

## கீழிருந்து மேலாக


09. தன் ரட்சிப்பின் கன்மலையை அசட்டை பண்ணியவன்
11. விநோதமான வேலைகளை யோசித்து செய்கிறதற்கு தேவ ஆவியால் நிரப்பப்பட்டவன்

# முன்மாதிரி



## வேதப்பகுதி: 1தீமோத்தேயு 4:12-16

**பி**ல்குமார் ஞாயிறு ஆராதனைக்கு சரியான வேளையில் போய் அமர்ந்துவிடுவான். ஆனால் எல்லோரும் மிகவும் கால தாமதமாகியே வருவார்கள். எல்லாரும் லேட்டாகத்தான் வருகிறார்கள். நான் மட்டும் சரியான நேரத்திற்கு வருவதால் என்ன பயன் என்று அவன் யோசிப பான். ஒரு நாள் அவன் ஆலயத்திற்கு வந்த அதே வேளையில் வேறு சிலரும் வந்திருந்தனர். அவனுக்கு மகிழ்ச்சியா யிருந்தது.




அவர்கள் அவனைப் பார்த்து: பில்குமார் உன்னைக் குறித்து போதகர் சொன்னார். நீ ஒருவன் மட்டும் தான் சரியான நேரத்திற்கு ஆராதனைக்கு வருகிறாய் என்று. எனவே நாங்களும் உன்னைப் போல சரியான நேரத்திற்கு வந்ததோம் என்றார்கள்.

**மற்றவர்கள் சரியாக இல்லாவிட்டாலும் நாம் சரியாக இருக்க வேண்டும். அப்போது மற்றவர்களுக்கு நாம் நல்ல முன் மாதிரியாகி விடுவோம்.**

**சிந்தனைக்கு:- சரியானதைச் செய்வதில் நாம் உறுதியாயிருக்க வேண்டும். நாம் பிறருக்கு நல்ல முன்மாதிரியாக இருப்பதே தேவனுடைய சித்தம்**

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்! – அக்டோபர் 7

# அருட்பணியாளர்








## லோத்தி மூன்

**1840 – 1912**

### உள்ளத்தில் இயேசு

சீன தேசம் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அது ஒரு கம்யூனிச நாடு. பொதுவுடமைக் கொள்கை பரவியிருந்தது. கடவுள் பக்தியற்ற அரசாங்கம் மக்களை ஆட்சி செய்து கொண்டிருந்தது. எனவே நீதியும், நேர்மையும் பெயரளவில் காணப்பட்டது. இயேசு இல்லாத நாடு எப்படியிருக்கும்? இருளில் அல்லவா மூழ்கிக் கிடக்கும்?

சீன தேசத்தை நோக்கிப் பல மிஷனெரிகள் பற்பல தரிசனங்களுடன் கிறிஸ்துவின் அன்பை அறிவிக்க கடந்து சென்று கொண்டிருந்தனர். சிலர் பாதியிலேயே திரும்பிவிட்டனர். ஏனெனில் உபத்திரவங்களும், போராட்டங்களும் அங்கு மலிந்து கிடந்தன.

லோத்தி மூன் தன்னந்தனியான பெண்ணாக சீன தேசத்தை நோக்கிப் புறப்பட்டாள். உள்ளத்தில் இயேசு இருந்ததால் அவள் வேறெதற்கும் பயப்படவில்லை. சீனர்களின் உள்ளத்திலும், இல்லத்திலும் கிறிஸ்துவே வீற்றிருக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளே அவர் சிந்தையில் நிறைந்திருந்தது. 1885இல் ஆரம்பிக்கப்பட்ட அப்பயணம் மிகவும் சுறுசுறுப்படைந்து பற்பல மக்களை சந்திக்கச் செய்தது.

**பிங்குடு என்னும் இடத்தில் பணி செய்ய இடம்பெயர்ந்த போது அவர்களுக்கு 44 வயதாகியிருந்தது. அங்குள்ள மக்கள் அம்மையாரைப் பார்த்துப் பேய் பிடித்த கிழவி என்று தூற்றினர். ஆயினும் அஞ்சா நெஞ்சத்துடன் பணியைத் தொடர்ந்தார் லோத்தி.**

விடுப்பு எடுக்க வேண்டிய காலத்தில் கூட விடுமுறை எடுக்காமல் மும்முரமாகச் சுவிசேஷப் பணியில் ஈடுபடலானார். இதினிமித்தம் திருச்சபை ஒன்றை ஆரம்பித்தார். 1889ஆம் ஆண்டில் ஞானஸ்நான ஆராதனையும் நடைபெற்றது. இருபது ஆண்டுகளில் ஆயிரத்திற்கும் மேலானோர் இயேசு கிறிஸ்துவைத் தம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர்.

சீன மக்களுக்காகவே வாழ்ந்த இத்தாய் 1912ஆம் ஆண்டு இளைப்பாறுதலில் பிரவேசித்தார்.

**அன்பரே! எதிர்ப்பு வரும் இடங்களிலும் உறுதியாக நின்று நற்செய்தியை அறிவிப்பதற்கு நீங்கள் ஆயத்தமா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதைக்காட்டிலும் ஆழமான சந்தோஷம் வேறெதிலும் இல்லை — லோத்தி மூன்**

*நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜூன் 13*



## ஜான் ஹோல்ம்ஸ்

### 1866 – 1934

### உங்கள் திட்டம் என்ன?

**பா**ப்புவா நியூகினியா தீவு. அங்கு வாழும் மக்கள் முற்றிலும் வித்தியாசமானவர்கள். உயிருடன் மனிதர்களைக் கடித்து, ருசித்து சாப்பிடும் நர மாமிசப் பட்சிணிகள். அழுக்கு நிறைந்த உடலுடன் துர்நாற்றம் உடையவர்களாக நடமாடும் நாகரிகமில்லா மக்கள். இவர்களின் ஒவ்வொரு வீட்டின் வாசலிலும், மண்டை ஓடுகளாலான அலங்காரம் காணப்படும்.

பல நூற்றாண்டுகளாகவே இம் மக்களுக்கு கிறிஸ்துவின் அன்பை அறிவிப்பதற்கு ஆட்கள் யாரும் செல்லவில்லை. அவ்விதம் சென்றவர்களில் சிலரும் தங்கள் நாடு திரும்பவில்லை.

இம்மக்களைப் பற்றி கேள்விப்பட்டார் ஜான் ஹோல்ம்ஸ். காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த நியூகினியா தீவு மக்களுக்கு கிறிஸ்துவின் அன்பை எடுத்துரைக்கத் தீவிரம் கொண்டார். எனவே, லண்டன் மிஷனெரி ஸ்தாபனத்தில் இணைந்தார். ஜேம்ஸ் சால்மர்ஸ்

என்ற மிஷனெரியுடன் இணைந்து பணி செய்ய தன் ஆவலைத் தெரிவித்தார். தன்னுடைய விருப்பம் நிறைவேற்றப்படவே, அதிக மகிழ்ச்சியுடன் கையில் ஒரு பழைய பெட்டியுடன், ஆஸ்திரேலியாவுக்கு கப்பலில் பயணமானார்.

**வியாமழன் என்ற திவில் கப்பல் வந்து நின்றது. ஜேம்ஸ் சால்மர்ஸ் என்ற மிஷனெரி ஜான் ஹோல்ம்ஸை எதிர்நோக்கி நின்றார். அவரைத் தனது சிறிய கப்பலில் ஏற்றிக்கொண்டு பாப்புவா தீவிற்குச் சென்றார். அம்மக்களின் நிலையைக் கண்ட ஹோல்ம்ஸ் ஒரு நொடி கதி கலங்கினார். உடலிலே துணிகள் இல்லாமல், சகிக்கக்கூடாத துர்நாற்றம் மிக்கவர்களாக நின்று கொண்டிருந்தனர் மக்கள். முதலில் அவர்கள் மொழியைக் கற்றுக் கொண்ட இவர், அவர்களுடன் நட்புடன் பழக ஆரம்பித்தார். மக்களின் மூட நம்பிக்கைகளிமித்தம் ஏற்பட்ட சண்டைகளினால், பல மனிதர்கள் கொல்லப்பட்ட போது, அவர்களிடம் சமரசத்தை ஏற்படுத்தி அமைதியை நிலைநாட்டினார்.**

பள்ளிக்கூடங்களையும், வீடுகளையும் கட்டினார். வேதாகமத்தை அவர்கள் மொழியிலே வாசிப்பதற்கு உதவினார். இதனால், பாப்புவா தீவின் மக்களின் வாழ்க்கைத் தரம் மாறியது. காட்டுமிராண்டிகளாக வாழ்ந்தவர்கள் கிறிஸ்துவின் மனிதர்களாக மாறினர்.

**அன்பரே! ஆண்டவரின் அழைப்பிற்கு அடிபணிய ஆயத்தமா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: இயேசுவோடு நாம் மகிமையடைய விரும்பினால் அவர் பருகிய கசப்பான கிண்ணத்திலிருந்து நாமும் பருக தயாராக இருக்க வேண்டும்.**

**நன்றி: *"மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்"* ஜூன் 28**

# குறுக்கெழுத்துப் போட்டி - 64
# சரியான பதில் எழுதியவர்கள்

01. க.விக்னேஸ்வரன் - ஊர்காவற்றுறை
02. வி.நிதர்சனா - ஊர்காவற்றுறை
03. கே.றெஜீவன் - ஊர்காவற்றுறை
04. வி.நிதர்சன் - ஊர்காவற்றுறை
05. பிரான்சிஸ் கஸ்தூரி - மானிப்பாய்
06. மேர்வின் பிரான்சிஸ் - மானிப்பாய்
07. சி.அபிகாயில் - மீசாலை
08. சி.எப்சிபா - மீசாலை
09. சி.அம்பாள் - மீசாலை
10. எஸ்.எமிமாள் - பாண்டவெட்டை
11. வி.தயாழினி - பாண்டவெட்டை
12. வ.ஜெயாழினி - பாண்டவெட்டை
13. சி.ரதீஸ்வரி - பாண்டவெட்டை
14. செ.டிசேந்திரன் - பாண்டவெட்டை

# வினா விடை - 67

01. குடித்து வெறித்து நிர்வாணியாய் படுத்திருந்த மனிதன் யார்?

02. கர்த்தருடைய பார்வையில் நிர்வாணியாயிருந்த சபை எது?

03. அவனவன் தன் தன் பாரத்தைச் சுமப்பானே என்றவர் யார்?

04. போஜனசாலைக்குள் அழைத்துக் கொண்டு போனது யார்?

05. கர்த்தர் கவனித்துக் கேட்பார் என்ற தீர்க்கதரிசி யார்?

06. தேவன் அவளை நினைத்தருளினார் யாரை?

07. யாருடைய சத்தம் இன்பமாயிருக்கிறது?

08. பச்சை மரம் பட்டபாடுகள் என்ன?

09. ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே என்றது யார்?

10. ஆத்துமாவுக்கு இன்பமாயிருப்பது என்ன?

## வினாவிடை - 66 சரியான பதில்கள்

01. தாவீது - சங்கீதம் 44:17

02. சிம்சோன் - நியாயாதிபதிகள் 16:1-30

03. 11நாளாகமம் 15:7

04. எசேக்கியேல் 29:18

05. அப்போஸ்தலர் 12:24

06. அப்போஸ்தலனாகிய பவுல் - கலாத்தியர் 6:17

07. ஏசாயா 7:12

08. உபாகமம் 25:11-12

09. எஸ்றா - எஸ்றா 9:3

10. அப்சலோம் - 11சாமுவேல் 14:25-26, 18:9-15




**உன்னோடேகூட இருக்கிற ஜனங்கள் எல்லாரும் கர்த்தருடைய செய்கையைக் காண்பார்கள்: உன்னோடேகூட இருந்து, நான் செய்யும் காரியம் பயங்கரமாயிருக்கும்.**

**- யாத்திராகமம் 34:10 -**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பிறந்திருக்கும் இப் புத்தாண்டில் அனல் வாசகர்களாகிய யாவருக்கும் மனமார்ந்த புத்தாண்டு வாழ்த்துக்களையும், ஆண்டவருடைய ஆசீர்வாதங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆண்டவருடைய வார்த்தைகள் மாறாதவைகளும், சத்தியமானவைகளுமாகும். கடந்த 2014ஆம் ஆண்டில ஆண்டவர் கொடுத்த வார்த்தை: **"ஏசாயா 12:6 சீயோனில் வாசமாயிருக்கிறவளே, நீ சத்தமிட்டுச் கெம்பீரி: இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் நடுவில் பெரியவராயிருக்கிறார்."** கடந்த ஆண்டு முழுவதும் ஆண்டவர் நம்மைக் கெம்பீரிக்கப்பண்ணி **2014ஆம் ஆண்டு ஓர் கெம்பீரிப்பின் ஆண்டு என வாக்குப் பண்ணியதை நிறைவேற்றினார்.** இதனைக் குறித்து அனேகருடைய சாட்சிகளைக் கேட்டுக் கர்த்தரை மகிமைப் படுத்தினோம்.

எனது தனிப்பட்ட வாழ்க்கையிலும் கடந்த ஆண்டை ஆண்டவர் கெம்பீரிப்பின் ஆண்டாக கட்டளையிட்டதற்காக அவரை மகிமைப்படுத்துகின்றேன்.

இன்று பிறந்திருக்கும் 2015ஆம் ஆண்டில் கர்த்தர் நமக்கு கொடுக்கும் வாக்குத்தத்தம் என்னவென்றால்: **யாத்திராகமம் 34:10 உன்னோடேகூட இருக்கிற ஜனங்கள் எல்லாரும் கர்த்தருடைய செய்கையைக் காண்பார்கள்: உன்னோடேகூட இருந்து, நான் செய்யும் காரியம் பயங்கரமாயிருக்கும்.** என்பதாகும்.

இந்த திடப்படுத்தலின் வார்த்தையை ஆண்டவர் தம்முடைய தாசனாகிய மோசேக்கு கூறினார். சீனாய் மலையிலே தேவ பிரசன்னத்திலே ஆண்டவர் வெளிப்படுத்திய தேவவார்த்தையே இதுவாகும்.

" "

சில சந்தர்ப்பங்களில் நம்முடைய வாழ்வில் நடைபெறும் காரியங்கள் தோல்வி போன்று காணப்படும்: அல்லது இந்தக் காரியம் நடைபெறாது, இது முடியாது என்பதைப் போன்ற நிலைமைகள் ஏற்படும். ஆனாலும் அவர் நம்மோடு கூட இருப்பாராகில் இறுதி நிமிடத்திலும் கூட நமக்கு ஜெயத்தைப் பெற்றுக் கொடுப்பார்.

தேவன் நம்மோடு கூட இருப்பாராகில் எமக்காக அவர் நடப்பிக்கும் காரியங்கள் ஆச்சரியமும் பயங்கரமுமாயிருக்கும். சில சந்தர்ப்பங்களில் நம்முடைய வாழ்வில் நடைபெறும் காரியங்கள் தோல்வி போன்று காணப்படும்: அல்லது இந்தக் காரியம் நடைபெறாது, இது முடியாது என்பதைப் போன்ற நிலைமைகள் ஏற்படும். ஆனாலும் அவர் நம்மோடு கூட இருப்பாராகில் இறுதி நிமிடத்திலும் கூட நமக்கு ஜெயத்தைப் பெற்றுக் கொடுப்பார். அது மாத்திரமல்ல ஏனைய அனைவரும் கர்த்தருடைய செய்கையைக் காணத்தக்கதாக காரியங்களை நடப்பிப்பார்.

**இந்த 2015ஆம் ஆண்டில் உங்கள் வாழ்க்கையில் ஆச்சரியமான காரியங்களை எதிர்பார்க்கின்றீர்களா? உங்களுக்கு முன்பாக திறந்த வாசல் காணப்பட வேண்டும் என்று**

வாஞ்சிக்கின்றீர்களா? உங்கள் குடும்பம் செழிக்க வேண்டுமென்று ஆவலாயிருக்கின்றீர்களா? பிள்ளைகள் படிப்பு காரியங்களில் சிறந்து விளங்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றீர்களா? தொழில் வாய்ப்புக்கள் சிறக்க வேண்டும் என்று காத்திருக்கின்றீர்களா? இவ்வாறு பல காரியங்கள் எதிர்பார்ப்புக் களாக வாழ்க்கையில் காணப்பட

> " "
> **ஆண்டவர் ஆச்சரியமான முறையில் நடப்பிக்க வேண்டுமென்றால் முதலாவது ஆண்டவர் உங்களோடு கூட இருக்க வேண்டும் என்பதனைப் புரிந்து கொள்ளுங்கள்.**

லாம். ஆனால் இக் காரியங்களை ஆண்டவர் ஆச்சரியமான முறை யில் நடப்பிக்க வேண்டுமென் றால் முதலாவது ஆண்டவர் உங்களோடு கூட இருக்க வேண்டும் என்பதனைப் புரிந்து கொள்ளுங் கள்.

தேவன் நம்முடன் இருக்க வேண்டும் அல்லது ஆச்சரிய மான காரியங்கள் எங்கள் வாழ்வில் நடைபெற வேண்டும் அல்லது கர்த்தருடைய செய்கைகளை அனைவரும் காணவேண்டு மென் றால் முதலாவது கர்த்தர் நமக் குள்ளே வாசம்பண்ணத்தக்கதாக அல்லது ஆச்சரியமான காரியங் களை அவர் நடப்பிக்கத்தக்க தாக நமது வாழ்க்கை கறை திறை பிழையற்ற தாக இருக்க வேண்டும்

அவர் நமக்குள்ளே வாசம் பண்ண வேண்டுமென்று வற்புறுத்தி நுழையமாட்டார். தாவீது சாலமொனுக்கு கூறுவது போல நாம் அவரைத் தேடினால் தான் அவர் நமக்குத் தென்படுவார்.

**1நாளாகமம் 28:9 என் குமாரனாகிய சாலொமோனே, நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும சேவி: கர்த்தர் எல்லா இருதயங்க ளையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார்: நீ அவரைத் தேடினால் உனக்குத் தென் படுவார்: நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார்.**

**அவர் உங்களோடு இருந் தால் இந்த ஆண்டு நிச்சயமாய் உங்கள் மூலம் நடப்பிக்கும் காரி யங்கள் பயங்கரமாயிருக்கும்.** அப்படி அவர் உங்களோடு இல்லா விட்டால் அவருடைய மகத்து வத்தை இந்த வருடத்திலே உங்களால் காணமுடியாது.

இதற்கு அனேக சம்பவங் களை உதாரணமாக நாம் பரிசுத்த வேதாகமத்தில் காண முடியும். **எப்பொழுது அல்லது எவர் களுடன் தேவன் இருந்தாரோ அப்பொழுது ஆண்டவர் அவர் களுக்காக மகத்துவமான காரியங் களை நடப்பித்து வந்தார்.** சில வேளைகளில் ஒரு காரியம் நடைபெறுவது ஆண்டவருடைய சித்தமாயிருக்கும். ஆனாலும் அவருடைய சித்தமாக இருந்தா லும் அவர் இருக்கின்றார் என்ப தனை உறுதிப்படுத்தா விட்டால்நமக்கு நஷ்டம்

## 01. இஸ்ரவேல் ஜனங்களும்; ஆயி பட்டணமும்

**தேவ சித்தமாக இருந்தாலும் தேவன் நம்மோடு கூட இல்லாவிட்டால் கர்த்தருடைய செய்கைகளைக் காணமுடியாது.**

யோசுவா இஸ்ரவேலரை மோசேக்கு பின்பதாக வழிநடத்தினான். அவன் ஓர் சிறந்த தலைவன். ஆண்டவர் அவனோடு கூட இருந்து பல அற்புதங்களை நடத்தினார். யோசுவா 07ஆம் அதிகாரத்தில் ஆயி பட்டணம் முறியடிக்கப்பட்ட சம்பவம் காணப்படுகின்றது. **இஸ்ரவேலர்கள் அனைவரும் ஆயி பட்டணத்தை முறியடித்து அதை நிர்மூலமாக்கி அழிக்க வேண்டுமென்பது ஆண்டவருடைய சித்தம்.** அதை இஸ்ரவேல் ஜனங்கள் செய்ய வேண்டும். யோசுவா 06ஆம் அதிகாரத்தில் எரிகோ பட்டணத்தை இஸ்ரவேல் ஜனங்கள் அழிப்பதை காண்கின்றோம். அதன் பிற்பாடு ஆயி பட்டணத்தை அழிக்க வேண்டும். ஆகவே அதனை வேவு பார்ப்பதற்காக ஆட்களை அனுப்பிவைக்கின்றான். அவர்களும அங்கே சென்று அது சிறிய பட்டணம் தான் என்று செய்தியைக் கொண்டு வருகின்றார்கள்.

அவர்கள் ஆயியைக்குறித்து குறைவாக எடைபோடுகின்றார்கள். அவ்வாறே ஆயின் மேல் யுத்தம் பண்ணச் சென்றார்கள். யுத்தம் பண்ணி ஆயி பட்டணத்தை அழித்து நிர்மூலம் பண்ணுவது தேவனுடைய சித்தம் தான், ஆனாலும் அவர்கள் ஆயி பட்டணத்திற்கு எதிராகச் சென்ற போது தோற்றுப் போனார்கள். அவர்கள் முறிந்தோடிப் போனார்கள். **யோசுவா 7:4 அப்படியே ஜனங்களில் ஏறக்குறைய மூவாயிரம்பேர் அவ்விடத்திற்குப் போனார்கள்: ஆனாலும் அவர்கள் ஆயியின் மனுஷருக்கு முன்பாக முறிந்தோடினார்கள்.** தேவ சித் தத்தை நிறைவேற்றுவதற்காகச் சென்றார்கள். ஆனால் இறுதியில் தோல்வியடைந்தார்கள்.

எனவே தேவ மனுஷனாகிய யோசுவா தேவ பிரசன்னத்திலே முகங்குப்புற விழுந்து கிடக்கின்றான். **யோசுவா 7:6-8 (6.) அப்பொழுது யோசுவா தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, அவனும் இஸ்ர வேலின் மூப்பரும் சாயங்காலமட்டும் கர்த்தரின் பெட்டிக்கு முன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்து, தங்கள் தலைகளின்மேல் புழுதியைப் போட்டுக்கொண்டு கிடந்தார்கள். 7. யோசுவா: ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, எங்களை அழிக்கும்படிக்கு எமோரியர் கைகளில்ஒப்புக் கொடுப் பதற்காகவா தேவரீர் இந்த ஜனத்தை யோர்தானைக் கடக்கப் பண்ணினீர்? நாங்கள்யோர்தானுக்கு அப்புறத்தில் மனத்திர்ப்தியாக இருந்துவிட்டோமா னால் நலமாயிருக்கும். 8. ஆ, ஆண்ட வரே, இஸ்ரவேலர் தங்கள் சத்துருக்களுக்கு முதுகைக் காட்டினார்கள்: இப்பொழுது நான்என்ன சொல்லுவேன்.**

தேவ பிரசன்னத்திலே தேவ சித்தத்தை ஆண்டவர் வெளிப்படுத்துகின்றார். ஆனால் இவர்கள் இந்த தேவ சித்தத்திலே தோல்வியடைவதற்கு என்ன காரணம்?

**யோசுவா 7:11 இஸ்ரவேலர் பாவஞ்செய்தார்கள்: நான் அவர்களுக்குக் கட்டளையிட்ட என் உடன்படிக்கையை மீறினார்கள்: சாபத்தீடானதில் எடுத்துக்கொண்டதும், களவுசெய்ததும், வஞ்சித்ததும், தங்கள்பண்டம்பாடிகளுக்குள்ளே வைத்ததும் உண்டே.** அவர்கள் பாவம் செய்ததினிமித்தம் ஆண்டவர் அவர்களை விட்டுவிலகி விட்டார். ஆகவே அவர்கள் ஆண்டவர் இல்லாமல் பாவத்துடன் தேவ சித்தத்தை நிறைவேற்ற சென்றார்கள். இதனால் தோல்வியைப் பெற்றுக் கொண்டார்கள்.

ஆனால் பாவத்தை அப்புறப்படுத்திய பின்னர் இஸ்ரவேலர்கள் அதே ஆயி பட்டணத்திற்கு எதிராக சென்ற போது ஆயி பட்டணத்தை முறியடித்தார்கள். **யோசுவா 8:28 யோசுவா ஆயியைச் சுட்டெரித்து, அதை இந்நாள் வரைக்கும் இருக் கிறபடி என்றைக்கும் பாழாய்க கிடக்கும் மண்மேடாக்கி,**

எனவே என் அன்பார்ந்த தேவ ஜனமே, உன்னுடைய வாழ்க்கையில் தேவ சித்தம் காணப்படலாம். அந்த தேவ சித்தம் காணப்படுவதனால் தேவன் உன்னை நேசிக்கின்றார் என்று பொருளாகாது. தேவ சித்தம் நிறைவேற தேவன் எம்முடன் இருக்கின்றார் என்ற நிச்சயத்துடன் சென்றால் தான் வெற்றி கிட்டும். தேவன் உன்னோடே இருந்தால் தான் உன்னோடு கூட இருக்கின்ற அனைவரும் கர்த்தருடைய மகத்துவமான செயல்களைக் காணக் கூடியதாக இருக்கும்.

## 02. சவுல் ராஜாவும்; தாவீது ராஜாவும்

**தேவன் என்னுடன் இருக்கின்றார் என்று சிந்திக்கலாம்: ஆனால் உண்மையாக அவர் எம்முடன் இல்லையென்றால் அவருடைய செய்கைகளைக் காண முடியாது**

இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட ராஜா தான் சவுல். ஆனால் அவன் தேவனால் புறக்கணிக்கப்பட்ட போது தேவன் இன்னொரு ராஜாவை (தாவீதை) அதே இஸ்ரவேல் ஜனங்களுக்காக அபிஷேகம் செய்கின்றார்.

இருவரும் அபிஷேகம் பெற்றவர்கள் தான். ஆனாலும் சவுல்இன்னும் ராஜாவாக இருந்தாலும் தேவன் அவனுடன் கூட இருக்கவில்லை. தேவன் அவனுடன் கூட செல்லாததினால் தான் அவனுடைய வாழ்க்கையில் பல தோல்விகளைச் சந்தித்தான். **ஆனால் தேவன் தாவீதோடே கூட இருந்தபடியால் அனைவரும் அறியத் தக்கதாக ஆண்டவர் தாவீதிற்காக மகத்துவத்தை நடப்பித்து தேவன் அவனுடன் இருப்**

பதை உறுதிப்படுத்தினார்.

ஒவ்வொரு முறையும் சவுல் தாவீதை கொலை செய்ய எத்தனிக்கும் போதும் தாவீது மடிந்து போய்விடுவான் என்பதனைப் போன்று நிலமை காணப் பட்டாலும் முடிவிலே எப்படியோ ஆண்டவர் தமது மகத்துவத் தினால் தாவீதை காப்பாற்றி விடுவார்.

**1சாமுவேல் 23:7 தாவீது கேகிலாவுக்கு வந்தான் என்று சவுலுக்கு அறிவிக்கப்பட்ட போது, தேவன் அவனை என் கையில் ஒப்புக் கொடுத்தார்: அவன் கதவுகளும் தாழ்ப்பாள்களுமுள்ள பட்டணத் திற்குள் பிரவேசித்ததினால், அடைபட்டிருக்கிறான் என்று சவுல் சொல்லி,** சவுல் ஒரு கட்டத்திலே தாவீதை தேவன் தன் கையில் ஒப்புக் கொடுத்தார் என்று சொல்லி தன்னுடன் தேவன் இருக்கின்றார் என்று சிந்தித்தான். அவன் அப்படி சிந்தித்தானே தவிர தேவன் அவனுடன் இருக்கவில்லை. **பல வேளைகளில் சவுலைப் போன்று நாமும் நினைக்கின்றோம்; தேவன் என்னுடன் தான் இருக்கின்றார் என்று ஆனால் கவனம்! சில வேளைகளில் அவர் நம்மோடு இல்லை என்பது இறுதியில் தான் தெரியவரும்.**

இந்த 2015ஆம் ஆண்டில் ஆண்டவர் நம்மை விட்டு விலகி விடாதபடி அவர் நம்மோடு இருக்க பிரயாசப்படுவோம். கர்த்தருடைய மகத்துவமான செயல்களை நாம் காண வேண்டுமானால் தேவன் நம்மோடு இந்த ஆண்டில் கூட இருந்தால்தான் இது நடைபெறும்.

தேவன் நம்மோடு இருக்க வேண்டுமென்றால் அதற்கு நம் இருதயம் தேவன் எதிர்பார்க்கின்ற பரிசுத்த நிலமையில் இருக்க வேண்டும். கறை, திரை, பிழையற்றவர்களாக இருந்தால் மட்டும் தான் தேவன் திருச்சபைக்கு கொடுக்கும் இந்த வாக்குத்தத்தம் உங்கள் வாழ்க்கையில் நிறைவேறும். அப்பொழுது உங்களைச் சூழ இருப்பவர்கள் கர்த்தருடைய மகத்துவ செய்கைகளைக் காண்பார்கள்.

ஆகவே இந்த ஆண்டு உங்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தமாகிய **யாத்திராகமம் 34:10 உன்னோடே கூட இருக்கிற ஜனங்கள் எல்லாரும் கர்த்தருடைய செய்கையைக் காண்பார்கள்: உன்னோடேகூட இருந்து, நான் செய்யும் காரியம் பயங்கரமாயிருக்கும்** என்பதைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். அவர் உங்களுக்காக காரியங்களை நடப்பிப்பார்.

"தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக"

**போதகர் ஜோஹனைன் டேவிஸ் பிலிப்,**
**தலைமைப் போதகர்,**
**சீயோன் தேவாலயம்,**
**யாழ்ப்பாணம்.**

**உன்னோடேகூட இருக்கிற ஜனங்கள் எல்லாரும் கர்த்தருடைய செய்கையைக் காண்பார்கள்: உன்னோடேகூட இருந்து, நான் செய்யும் காரியம் பயங்கரமாயிருக்கும்.**
**யாத்திராகமம் 34:10**

# சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால் சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L Rs 220.00 Per Year |
| இந்தியா | S.L Rs 390.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L Rs 840.00 Per Year |
| சிங்கப்பூர், மலேசியா | S.L Rs 420.00 Per Year |
| மத்திய கிழக்கு நாடுகள் | S.L Rs 510.00 Per Year |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா | S.L Rs 720.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்

## சந்தா கூப்பன்

பெயர்:-.................................................................

விலாசம்:-.................................................................

.................................................................

.................................................................

.................................................................

தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

இனிய புதுவருட நல் வாழ்த்துக்கள்!

Wish You a Happy New Year!

To:..........................................

..............................................

..............................................

..............................................

..............................................

Zion Church Office,
No. 347, Navalar Road,
Jaffna, Srilanka.